

# எழுதப்பட்ட நிரூபங்கள்



WILLIAM MARRION BRANHAM

2 கொரி. 3:2

எங்கள் இருதயங்களில் எழுதப்பட்டும், சகல மனுஷராலும் அறிந்து வாசிக்கப்பட்டும் இருக்கிற எங்கள் நிருபம் நீங்கள்தானே.

---

**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

---

**செய்தி: 57-09-15E எபிரெயர், ஏழாம் அதிகாரம் #1**

---

**33** இப்பொழுது, இப்பொழுது, ஆபிரகாம் உலகத்தை சுதந்தரிப்பவனாயிருந்தான். ஆபிரகாமினுடைய வித்தின் மூலமாகவே சகல ஜாதிகளும்

ஆசீர்வதிக்கப்படுவதாயிருந்தது. ஆகையால் தேவன் ஒரு மனித ரூபத்தில் இறங்கி வந்து, அவனிடத்தில் பேசினார்.


இப்பொழுது, தேவன் எப்பொழுதுமே பூமியின் மேல் இருந்து வருகிறார். தேவன் ஒருபோதும் பூமியைவிட்டுச் சென்றதேயில்லை. அவர் எப்போதாவது பூமியைவிட்டுச் சென்றிருப்பாரேயானால், அப்பொழுது அது என்னவாயிருக்கும் என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் தேவன் எப்பொழுதுமே ஏதோ ஒரு ரூபத்தில்

இங்கே இருந்து வருகிறார். ஓ, அவருடைய நாமத்திற்கே ஸ்தோத்திரம்!

**34** அவர் எகிப்திலிருந்து வெளிவந்து வனாந்திரத்தில் இருந்த பிள்ளைகளோடு ஒரு ஒளியின் ரூபத்தில் இருந்தார். அவர் ஆபிரகாமிடத்தில் ஒரு மனித ரூபத்தில் பேசினார். அவர் மேசோயினிடத்தில் ஒரு மனித ரூபத்தில் பேசினார். அவர் சபையினிடத்தில் ஒரு மனித ரூபத்தில், அவருடைய குமாரன், கிறிஸ்து இயேசு மூலமாய் பேசினார்.

அவர் இன்றைக்கு தம்முடைய சபையினூடாக, அபிஷேகிக்கப்பட்ட ஜீவனுள்ள தேவனுடைய சபையினூடாக, மண்பாண்டங்களினூடாக பேசிக்கொண்டிருக்கிறார். 'நானே திராட்சைச் செடி. நீங்கள் கொடிகள்.” தேவன் இன்னமும் பேசிக்கொண்டிருக்கிறார், நீங்கள் அவரை தோற்றுவிக்கிறபோது, உலகம் இயேசுவைக் காண்கிறது. அந்த விதமாகத்தான் உலகம்... உள்ளது. “நீங்கள் எழுதப்பட்டும், சகல மனுஷராலும் வாசிக்கப்படும் நிருபங்களாயிருக்கிறீர்கள். நீங்கள் என்னவாயிருக்கிறீர்கள் என்பதை

## உங்களுடைய ஜீவியம் சொல்லுகிறது.



2கொரி. 3:2

எங்கள் இருதயங்களில் எழுதப்பட்டும், சகல மனுஷராலும் அறிந்து வாசிக்கப்பட்டும் இருக்கிற எங்கள் நிருபம் நீங்கள்தானே.

---

**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

---

செய்தி: **60-02-29 வருகின்ற புயல்**

---

**29. நீங்கள் இரண்டில் ஒன்றாக மாத்திரமே இருக்க முடியும். நீங்கள் விசுவாசி அல்லது அவிசுவாசி. நீங்கள் விசுவாசியாயிருந்தால் இவைகளைச் செய்யமாட்டீர்கள்.**

இவைகளைச் செய்வீர்களானால் நீங்கள் எதை உடைவர்களாயிருக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் இவைகளை நீங்கள் செய்வீர்களானால், உங்களிடத்தில் தேவனின் அன்பு இல்லை. ”அப்படித் தான் வேதம் கூறுகின்றது. நாம் ஒன்றையும் பெறாமலே அதை பெற்றுக் கொண்டதாக அறிக்கை செய்கிறவர்களாயிருப்போம். பேச்சு அதிகம், ஆனால் அதன்படி வாழ்வது கிடையாது.

அப்படித்தான் நாம் அதிகம் பிரசங்கிக்கிறோம், ஆனால் பிரசங்கிப்பதை வாழ்ந்து காட்டுவதில்லை. நாம் மாத்திரம் ஜீவிக்கும் பிரசங்கமாக இருந்தால், நாம் ஒவ்வொருவரும் போதகர்களாக இருப்போம், எனக்கு ஒரு பிரசங்கம் செய்வதைக் காட்டிலும் அதை எனக்கு வாழ்ந்து காட்டுவதே நலம், ”நீங்கள் சகல மனுஷராலும் அறிந்து வாசிக்கப்பட்டும் இருக்கின்ற நிரூபங்கள்” என்று வேதம் உரைக்கிறது. எனவே பிரசங்கத்தை வாழ்ந்து காட்டுதலே சிறந்ததாகும்.

2கொரி. 3:2

எங்கள் இருதயங்களில் எழுதப்பட்டும், சகல மனுஷராலும் அறிந்து வாசிக்கப்பட்டும் இருக்கிற எங்கள் நிருபம் நீங்கள்தானே.

---

**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

---

**செய்தி: 61-03-19 யேசபேல் மார்க்கம்**

---

**4. நான் கேள்விப்பட்டபடி, சகோ. சலிவன் கூறின விதமாக, எல்லாவற்றிற்கும் பணம் செலுத்தப்பட்டு தீர்க்கப்படும். நாங்கள் இதுவரை ஒரு சென்டு**

கடனுடன் எந்த நகரத்தையும் விட்டு சென்றதில்லை. எல்லாமே கவனமாக செலுத்தப்பட்டு விடும். அதைத் தவிர வேறெதிலும் எங்களுக்கு நம்பிக்கையில்லை. நீங்கள் யாருக்கும் கடன்படக் கூடாது. நீங்கள் நேர்மையாக நடந்து கொள்ள வேண்டும். நீங்கள் யாருக்காவது கடன் பட்டிருந்தால், அவர்களிடம் சென்று அதைத் திருப்பிச் செலுத்த சிறிது அவகாசம் கேளுங்கள். பாருங்கள்? எப்பொழுதும் அதுவே மேலான... அது கிறிஸ்தவ மார்க்கத்தின் நல்ல அடையாளம்: உத்தமமாகவும் நேர்மையர்கவும் இருப்பதென்பது.

**5. நீங்கள் எதைக் குறித்து பேசுகின்றீர்களோ, அவ்வாறே வாழ விரும்புகின்றீர்கள். நீங்களே அவ்வாறு வாழாமற் போனால், மற்றவர்கள் அவ்வாறு வாழ்வதற்கு நீங்கள் எப்படி எதிர்பார்க்க முடியும்? நீங்கள் சகல மனிதராலும் வாசிக்கப்படுகின்ற எழுதப்பட்ட நிரூபங்களாயிருக்கிறீர்கள். (2கொரி, 3:2). எனவே எப்பொழுதும் உத்தம மாயும் உண்மையுள்ளவர்களாயும் இருங்கள். மற்றவரை அது அதிகமாக புண்படுத்தினாலும் உண்மையையே பேசுங்கள். எப்படி யாயினும், உண்மையையே பேசுங்கள். ஏனெனில் ஒவ்வொரு**

முறையும் நீங்கள் அதை அவ்வாறே கூறமுடியும். நீங்கள் பொய் பேசினால், நீங்கள் கோடிக்கணக்கான மைல்கள் சுற்றிவந்து, மறுபடியும் அந்த பொய்க்கு வரும்படியாக நேரிடும், நீங்கள் பயங்கரமான காரியத்தை செய்து விட்டீர்கள். நீங்கள் உத்தமமாயிருங்கள். நீங்கள் அதை எப்பொழுதும் அதே விதமாகக் கூறலாம். ஏனெனில் அது உண்மையாயுள்ளது.

2கொரி. 3:2

எங்கள் இருதயங்களில் எழுதப்பட்டும், சகல மனுஷராலும் அறிந்து வாசிக்கப்பட்டும் இருக்கிற எங்கள் நிருபம் நீங்கள்தானே.

---

**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

---

## செய்தி: 61-11-12 கண்டும் காணாதது போல் விடப்படுகிற ஒரு உண்மையான அடையாளம்

---

**38.** எசேக்கியல் என்னும் இந்த இளம் தீர்க்கதரிசி எப்பொழுதுமே ஒரு அடையாளமாக எந்நேரத்திலும்

இருந்து வந்தான் என்று நாம் காண்கிறோம். அவன் எவ்வளவாக தன்னைத் துன்புறுத்திக் கொண்டான். வேதத்தில் ஒரு இடத்தில் அவன் தன் இடது பக்கமாய் முன்னூற்று தொண்ணூறு நாட்கள் ஒருக்களித்து படுத்திருந்ததாகக் காண்கிறோம். அவன் சிறு பயற்றையும் பெரும்பயற்றையும் கொண்டு வந்து தானியத்துடன் கலந்து ஒரு பானையில் போட்டு சமைத்து அதை தன் பக்கத்தில் வைத்துக் கொள்ள வேண்டுமென்றும், அவன் மறுபக்கம் புரளாமல் இடது பக்கமாய் மாத்திரம் முன்னூற்று

தொண்ணூறு நாட்கள் ஒருக்களித்து படுத்திருக்க வேண்டுமென்றும் தேவன் கூறினார். அதை சற்று யோசித்துப் பாருங்கள்! அதன் பிறகு உன் வலது பக்கமாய் மறுபடியும் ஒருக்களித்து நாற்பது நாட்கள் படுத்திரு“ என்றார்.

**39.** அவர் இங்கு சொன்னார், “நீ காண்பது என்ன வெனில்...“ எசேக்கியல் சொன்னான் .... “நீ ஜனங்களின் அக்கிரமத்தை சுமக்க வேண்டும். ஒவ்வொரு நாளுக்கும் ஒரு வருஷத்தைக் கணக்கிடுவேன்’ என்றார். அவன் படுத்திருந்த

ஒவ்வொரு நாளுக்கும் அவர்கள் ஒரு வருஷம் சிறையிருப்பார்கள். அவர்களுடைய அக்கிரமத்தை தேவன் நினைவு கூர்ந்து அவர்கள் ஏறெடுக்கும் ஜெபங்களை இனி ஒருபோதும் கேட்க மாட்டார்.

**40.** ஆனால் அந்த மனிதன் அனுபவிக்க வேண்டிய பாடுகள்! அது ஏன் அவசியமாயிருந்தது? அப்படி ஒரு மனிதன் செய்ய வேண்டிய அவசியமென்ன என்று அநேகர் வியந்ததுண்டு. ஏனெனில் ஜனங்கள் வார்த்தையைப் படிக்கத் தவறினர். அவர்கள் ஜெபம் செய்யவும் தவறினர். தேவன்

இராஜாதிபத்தியமுள்ளவர். அவர் தமது தீர்க்கதரிசியை ஒரு அடையாளமாக அனுப்புகிறார். ஜனங்கள் வேதத்தை வாசிக்க வில்லை, அவர்கள் வாசிக்க அக்கரை கொள்ளவில்லை. அவர்கள் ஜெபம் செய்யவுமில்லை. ஏனெனில், செய்வதற்கு அவர்களுக்கு வேறு காரியங்கள் இருந்தன. எனவே ஜெபம் செய்ய அவர்கள் நேரத்தை எடுத்துக் கொள்ளவில்லை. வேதம் அவர்களுக்கு சலிப்பு தட்டி விட்டது. எனெனில் இந்த நவீன நாட்களுக்கு அல்லது எந்த நாட்களுக்கும் அது தீவிர செயல்

கொண்டிருக்கவில்லை என்பதாக கருதப்படுகிறது.

41. உங்களுக்குத் தெரியுமா, “நீங்கள் எல்லா மனுஷராலும் வாசிக்கப்படும் தேவனுடைய நிரூபங்களாயிருக்கிறீர்கள்“ என்று பவுல் கூறினான் என்று நினைக்கிறேன். தேவன் தமது அடையாளத்தைக் காண்பிக்க, ஜனங்களை அடையாளங்களாக உபயோகிக்கிறார். அநேக சமயங்களில் அந்த அடையாளம், ஏறக்குறைய எல்லா சமயங்களிலுமே – தெரிந்து கொள்ளப்பட்டவர்களைத் தவிர

மற்றவர்களால் – அசட்டை பண்ணப்பட்டு, குறை கூறப்பட்டு, கேலி செய்யப்பட்டு, புறக்கணிக்கப்பட்டு...

42. பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசிகளின் நாட்களிலும் அவர்களுக்கு மூளை கோளாறு ஏற்பட்டு விட்டதாகக் கருதப்பட்டது. இந்த தீர்க்கதரிசிகளுக்கு மனநிலை கோளாறு ஏற்பட்டு விட்டதென்றும் அவர்கள் மனநிலை பாதிக்கப்பட்டு விட்டதென்றும் ஜனங்கள் எண்ணினர். இந்த தீர்க்கதரிசிகள் வனாந்தரத்திலிருந்து புறப்பட்டு வந்து அற்புதங்களை செய்து விட்டு

வனாந்தரத்துக்கு திரும்பிப் போவதை அவர்கள் கண்டனர். அவர்கள் வேதவாக்கியங்களை அறியாதிருந்த காரணத்தால், இந்த தீர்க்கதரிசிகளை அவர்கள் கேலி செய்தனர்.

2கொரி. 3:2

எங்கள் இருதயங்களில் எழுதப்பட்டும், சகல மனுஷராலும் அறிந்து வாசிக்கப்பட்டும் இருக்கிற எங்கள் நிருபம் நீங்கள்தானே.

---

## வில்லியம் மரியன் பிரன்ஹாம்

---

## செய்தி: 61-11-12 கண்டும் காணாதது போல் விடப்படுகிற ஒரு உண்மையான அடையாளம்

---

**269.** இந்த சிறு சபை; இந்த ஜனங்கள் நாளுக்கு பின் நாள் நூற்றுக்கணக்கான மைல்கள்

காரோட்டி வருகின்றனர். ஓ நித்தியமானவரே, அன்புள்ளவரே, ஒரு கிரியையும் மறவாதவரே, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபின் தேவனே, இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவரை உன்னதமானவரின் வலது பாரிசத்தில் இப்பொழுது வீற்றிருக்கச் செய்திருக்கிறவரே, மாம்சத்தில் வாசம் செய்த தேவனே, உமது நாமத்தில் நான் ஆசீர்வதிக்கிறவர்களை நீர் ஆசீர்வதிப்பீராக. ஒரு அடையாளம் – முடிவு கால அடையாளம் ஒன்றுண்டு என்பதை அவர்கள் எப்பொழுதும் நினைவு

கூறுவார்களாக. அவர்கள் எங்கே வேலை செய்தாலும் அவர்களுக்கு உமது ஆசீர்வாதத்தை அளித்து, அவர்கள் மற்றவர்கள் மீது உமக்கென்று வெற்றி பெறச் செய்வீராக – அது தெரு மூலையானாலும், பெட்ரோல் நிறைக்கும் இடமானாலும், எதுவானாலும் – பலசரக்கு கடையிலும் பால் காரனிடத்திலும் சாட்சி கூறுவார்களாக. அது எதுவாயிருந்தாலும், கர்த்தாவே, அவர்கள் இருதயத்தில் ஏதாவது எச்சரிப்பு எழுந்தால், அவர்கள் சாட்சிகளாயிருப்பார்களாக. அவர்கள் தேவபக்தியும்

பரிசுத்தமுமான வாழ்க்கை வாழ்ந்து, எல்லா மனிதராலும் வாசிக்கப்படுகிற எழுதப்பட்ட நிரூபங்களாய் இருப்பார்களாக.

2கொரி. 3:2

எங்கள் இருதயங்களில் எழுதப்பட்டும், சகல மனுஷராலும் அறிந்து வாசிக்கப்பட்டும் இருக்கிற எங்கள் நிருபம் நீங்கள்தானே.

---

**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

---

**செய்தி: 62-02-18 விடாமுயற்சி**


---

**169.** அந்த பரிசேயர்கள் தங்கள் இருதயத்தில், "அவன் பெயல்செபூல். அவன், அது தான் அவன். அது தான் முற்றிலுமாக" என்றனர்.

170. அவர் திரும்பிப் பார்த்து, “அதற்காக உங்களை மன்னிக்கிறேன்” என்றார். இயேசு கூட்டத்திலுள்ளவர்களைப் பார்த்து, அவர்களுடைய சிந்தனைகளை அறிந்து கொள்ளுதல். அது என்ன? வார்த்தை, வார்த்தை மாம்சமாகி, இருதயத்திலுள்ள நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுத்தல். இப்பொழுது தேவனுடைய வார்த்தை அவ்விதமாகவே உள்ளது. அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார். பாருங்கள்?

171. ஜீவனுள்ள தேவனை உங்களில் பெற, நீங்கள் ஜீவனுள்ள வார்த்தையை உங்களில் பெற்றவர்களாய் இருக்க வேண்டும். ஏனெனில் இங்குள்ள வார்த்தை உங்களில் மாம்சமும், ஆவியும், ஜீவனுமாகும்போது. அது தேவனாகி விடுகிறது. அது உங்கள் மாம்சத்துக்குள்ளும் உங்கள் விசுவாசத்திலும் சென்று, ஜீவனாகும்போது நீங்கள் ஜீவிக்கிற திருஷ்டாந்தமாயிருக்கிறீர்கள். நீங்கள் எல்லா மனிதராலும் வாசிக்கப்படுகிற தேவனுடைய நிரூபங்களாக இருக்கின்றீர்கள். நீங்கள் கிறிஸ்துவைப் போல்

பரிபூரணத்தைப் பெற்றிருக்கமாட்டீர்கள், ஏனெனில் அது பெந்தெ கொஸ்தே நாளில் பகிர்ந்தளிக்கப்பட்டது.



2கொரி. 3:2

எங்கள் இருதயங்களில் எழுதப்பட்டும், சகல மனுஷராலும் அறிந்து வாசிக்கப்பட்டும் இருக்கிற எங்கள் நிருபம் நீங்கள்தானே.

---

**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

---

செய்தி: **62-10-14M ஓர் பரிபூரண மனிதனின் வளர்ச்சி**

---

**346.** இத்தகைய ஆலயத்தில்தான் தேவன் வாசம் செய்கிறார். கோபுரம் உடையதாய் அதில் ஆலயமணி (Bell) வைக்கப்பட்ட உயர்ந்த

கட்டிடத்திலல்ல. பாருங்கள்? ஆனால், “ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம் பண்ணினீர்” – தேவன் வாசம் செய்யத்தக்கதான, நடக்கத்தக்கதான, பார்க்கத்தக்கதான, பேசத்தக்கதான , கிரியை செய்யத்தக்கதான ஒரு சரீரத்தையே தேவன் ஆயத்தம் செய்தார். ஆமென்! தேவனுடைய சுபாவத்தில் ஜீவிப்பது. தேவன் இரண்டு கால்களால் உன்னில் நடப்பது. மகிமை! ”நல்ல மனுஷனுடைய நடைகள் கர்த்தரால் உறுதிப்படும்.” தேவன் உங்களிலிருந்து நடப்பது. ”எங்கள் இருதயங்களில் எழுதப்பட்டும், சகல

மனுஷராலும் அறிந்து வாசிக்கப்பட்டும் இருக்கிற எங்கள் நிருபம் நீங்கள்தானே” என்று பவுல் கூறுகிறார். கிறிஸ்துவிலிருக்கும் ஜீவன் உங்களில் இருக்குமானால் நீங்களும் கிறிஸ்துவின் ஜீவனை பிரதிபலிப்பீர்கள்.

2கொரி. 3:2

எங்கள் இருதயங்களில் எழுதப்பட்டும், சகல மனுஷராலும் அறிந்து வாசிக்கப்பட்டும் இருக்கிற எங்கள் நிருபம் நீங்கள்தானே.

---

**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

---

**செய்தி: 63-07-17 கிறிஸ்துவினால் கட்டப்பட்டவனாயிருக்கிற பவுல்**

---

**2. இந்த ஜனங்களுக்காக இப்பொழுது உமக்கு நன்றி செலுத்துகிறோம். அவர்களுக்கு அருமையாயுள்ள விசுவாசத்தை அவர்கள் கண்டுகொள்ள**

ஆரம்பித்து, விசுவாசம் எதைக் குறிக்கிறது என்பதை அறிந்து கொண்டுள்ளனர். நடக்கவிருக்கும் அராதனைகளுக்காக உமக்கு நன்றி செலுத்தி, விசுவாசத்துடன் காத்திருக்கிறோம். கர்த்தாவே, நீர் பழைய காலங்களில் செய்தது போல ஏதாவதொன்றை செய்வீர் என்னும் மிகுந்த எதிர்பார்த்தலுடன் காத்திருக்கிறோம். நீர் வானத்தின் பலகணிகளைத் திறந்து, தேவன் இக்கடைசி காலத்திற்கென வாக்களித்துள்ளவைகளை ஊற்று வதற்கு நேரம் நெருங்கிவிட்டதென்று விசுவாசிக்கிறோம்.

3. தேசங்கள் அனைத்திலும் உள்ளவர்களுடன் நீர் இருக்க வேண்டுமென்று உம்மைக் கேட்கிறோம். இன்றைக்கு உலகத்தின் பல்வேறு பாகங்களில் உள்ளவர்களின் தேவைகளைக் குறித்து கேள்விப்பட்டோம். கர்த்தாவே, அவர்களுடைய விண்ணப்பங்களை அருளிச் செய்து உலகின் பல்வேறு பாகங்களில் இந்த மகத்தான காரியத்தை எதிர்நோக்கியுள்ளவர்கள், உமது மகத்தான கரம் உலகம் முழுவதும் அசைவதைக் காண அருள்புரியும். எங்கள் பாவங்களை எங்களுக்கு மன்னியும். கர்த்தாவே, உமது ஆவி

யினாலும் உமது வார்த்தையினாலும் எங்களை சிட்சித்து, நாங்கள் தேவனுடைய சித்தத்துக்கு கீழ்படியும் ஊழியக்காரராக எங்களை ஒழுங்குபடுத்திக் கொள்ளும்படி செய்யும். ஆதி கிறிஸ்தவர்கள் செய்ததை சிந்தித்து எங்கள் இருதயங்களில் நினைவுப்படுத்திக் கொள்ளும்படி அருள் புரியும் ..... உம்மோடு தனிப்பட்ட விதத்தில் தொடர்பு கொண்டிருந்தவர்களை நாங்கள் சந்திக்கும்போது, நாங்கள் எத்தகைய மக்களை சந்திக்கிறோம் என்று நாங்கள் நினைத்துக் கொள்ளட்டும். அவர்களுடைய

முகங்கள் விசுவாசத்தினாலும் களிப்பினாலும் எவ்வளவு பிரகாசமாயிருந்திருக்கும்! அவர்கள் ஜனங்களின் மத்தியில் நடந்து சென்ற போது, அவர்களுடைய வாழ்க்கை ஜீவிக்கிற தேவனுடைய வார்த்தையாக (எல்லா மனிதராலும் வாசிக்கப்படும் எழுதப்பட்ட நிரூபங்களாக) இருந்திருக்கும். தேவனே, அதை மறுபடியும் அருளுவீராக.

4. கர்த்தாவே, எங்கள் அநேகருடைய வாழ்க்கை உமக்கு அர்ப்பணிக்கப்பட்டு, பரிசுத்த ஆவி எங்களில் வாசம் செய்து எங்கள்

மூலம் பேசுவாராக. நாங்கள் தெருக்களில் நடந்து உலகத்துடன் தொடர்பு கொள்ளும்போது, அவர்களைப் போல் நாங்கள் இருக்கக் கூடாது என்பதை எங்கள் மனதில் நினைவுபடுத்திக் கொள்வோமாக. கர்த்தாவே, நாங்கள் வழி விலகி, இவ்வுலகில் அவர்களுக்குரிய இடத்தை நாங்கள் கொடுத்து விடுகிறோம். நாங்கள் வேறொரு உலகத்திலிருந்து இங்கு வந்துள்ள பிரதிநிதிகள் என்பதை உணர்ந்தவர்களாய், பின்னிடத்தை எடுத்துக் கொள்கிறோம். கர்த்தாவே, அதிகாரத்துக்கு வரவிருக்கும் ஒரு ராஜ்யம்

எங்களுக்குள்ளது. எங்கள் மகத்தான ராஜா விரைவில் வந்து, அவருடைய அதிகாரத்திலுள்ள எல்லா ராஜ்யங்களையும் எடுத்துக் கொள்வார். நாங்கள் இந்த பூமியில் அவருடன் ஆயிரம் வருடம் அரசாண்டு, அவருடன் சதாகாலங்களிலும் இருப்போம்.

5. கர்த்தாவே, இதை நாங்கள் மனதில் கொண்டவர்களாய், எங்கள் ஜெபத்துக்கு பதிலை உம்மிடமிருந்து எதிர்பார்க்கிறோம். எங்கள் செய்கையில், எங்கள் பேச்சில், எங்கள் சிந்தையில், உமது சித்தத்துக்கு விரோதமாக நாங்கள்

ஏதாகிலும் தவறு செய்திருப்போமானால், அதை இப்பொழுது அறிக்கையிடுகிறோம். இயேசு கிறிஸ்துவின் இரத்தம் எங்களைக் கழுவி சுத்திகரிப்பதாக.

2கொரி. 3:2

எங்கள் இருதயங்களில் எழுதப்பட்டும், சகல மனுஷராலும் அறிந்து வாசிக்கப்பட்டும் இருக்கிற எங்கள் நிருபம் நீங்கள்தானே.

---

**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

---

**செய்தி: 63-07-28 கிறிஸ்து தேவனுடைய பரமரகசியத்தின் வெளிப்படுதலாயிருக்கிறார்**


---

**93.** பிதாவே, எங்களை ஒன்றாக வைத்தருளும். பரிசுத்த ஆவியானவர் எங்களை வழிநடத்துவாராக,

திசைகாட்டுவாராக. உமக்கென ஊழியம் செய்யும் நீண்ட ஜீவியத்தை எங்களுக்குத் தாரும். உம்முடைய வார்த்தையிலிருந்து நாங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் அந்த மகத்தான செய்தியை இன்று காலை எங்களுக்குத் தந்தருள்வீராக! அது ஒவ்வொருவருடைய இருதயங்களிலும் பாய்வதாக! ஆண்டவரே, இந்த உதடுகள் சத்தியத்தை மாத்திரம் பேசச் செய்யும். அதை கேட்கும் ஒவ்வொரு இருதயமும் சத்தியத்தை ஏற்றுக் கொள்வதற்கென வளம் பொருந்தியதாய் இருப்பதாக!

அது நித்திய ஜீவனின் மகத்தான மரங்களாக வளர்ந்து, பிரகாசிக்கிற ஒளியாகவும், எல்லாராலும் விரும்பிப் படிக்கும் நிரூபங்களா கவும் அமைந்து மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்து எங்கள் மத்தியில் இருக்கும் இயேசு கிறிஸ்துவை மற்றவர்கள் அறிந்து கொள்ள உதவியாயிருக்கட்டும். எங்களை உமது அன்பினால் நிறைத்து ஆவியின் கனிகள் எங்களில் காணப்பட்டு, இரண்டாயிரம் ஆண்டுகள் கழிந்த பின்பும் இயேசு வின் ஜீவன் எங்களுக்குள் வாசமாயிருப்பதனால் நேரிட்டுள்ள பலனை மற்ற மனிதர், ஸ்திரீகள்,

பையன்கள், பெண்கள் அனைவரும் கண்டு கொள்ள அருள் புரியும். பிதாவே, உம்மை கனப் படுத்துவதற்கு இதை எங்களுக்கு அருள்வீராக. இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வேண்டிக் கொள்கி றோம். ஆமென்.



2கொரி. 3:2

எங்கள் இருதயங்களில்
எழுதப்பட்டும், சகல
மனுஷராலும் அறிந்து
வாசிக்கப்பட்டும் இருக்கிற
எங்கள் நிருபம் நீங்கள்தானே.

---

**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

---


**செய்தி: 63-11-10M இப்பொழுது காவலிலுள்ள ஆத்துமாக்கள்**

---

**159.** அந்நிய பாஷை பேசுவதனால் அல்ல, ஆவியில் நடனமாடுவதனால் அல்ல, ஒரு ஸ்தாபனத்தை சேர்ந்து கொள்வதனால் அல்ல, ஆவியின்

கனியினால் அல்ல (கிறிஸ்தவ விஞ்ஞானம கூட்டத்தார் உங்கள் யாவரையுமே அதில் மிஞ்சிவிட முடியும்). அதே சமயத்தில் இயேசு கிறிஸ்து தேவன் என்பதை மறுதலிக்கவும் முடியும். அதுவல்ல. வார்த்தை ஜீவிப்பதாகும். அதுதான். அவர்கள் மாத்திரம் என்றும் நோக்கிப் பார்த்திருந்தால் அவர் தான் மேசியாவென்றும், அவர் தான் மாம்சத்தில் வெளிப்பட்ட ஜீவ வார்த்தை என்றும் அவர்கள் அறிந்திருப்பார்கள். தேவனுடைய ஆவியை தனக்குள் கொண்டுள்ள எந்த மனிதனும், எந்த ஸ்திரீயும் – அந்த வார்த்தை அவர்களுக்குள்

ஜீவிக்கிறது. அதுவே முன்குறிக்கப்பட்டவர்களின் இருதயத் துடிப்பாக அமைந்துள்ளது. ஏனெனில் கர்த்தருடைய வார்த்தை அவர்களுக்கு வருகிறது. அவர்கள் ஜனங்களுக்கு வார்த்தையாகத் திகழ்கின்றனர் – எல்லா மனிதராலும் வாசிக்கப்படும் எழுதப்பட்ட நிருபங்களாயுள்ளனர். அது சரியா? மூன்றாம் இழுப்பானது வந்துவிட்டதா?



2கொரி. 3:2

எங்கள் இருதயங்களில் எழுதப்பட்டும், சகல மனுஷராலும் அறிந்து வாசிக்கப்பட்டும் இருக்கிற எங்கள் நிருபம் நீங்கள்தானே.

---

**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

---

செய்தி: **64-01-12 ஷாலோம்**

---

**9.** தேவன் மனிதனுக்குள் இருக்கிறார். அவர் இன்று தமது சபையின் மூலமாக தம்மை அடையாளம் காண்பிக்கிறார். மறுபடியும் பிறந்த கிறிஸ்தவனின்

மூலம் அவர், தாம் இன்னமும் தேவனாயிருக்கிறார் என்று அடையாளம் காண்பிக்கிறார். வெளிப்புற உலகம் தேவனை உங்களிலும் என்னிலும் காண்பதன் மூலமாகவே அவரை அறிந்து கொள்ள முடியும். நாம் சகல மனிதராலும் வாசிக்கப்படுகிற எழுதப்பட்ட நிரூபங்களாக – வேதாகமத்தின் நிரூபங்களாக இருப்போமானால், அந்த ஒரு வழியில் மாத்திரமே அவர்கள் தேவனை அறிந்து கொள்ள முடியும். நாம் வாழும் வாழ்க்கை நமக்குள் என்ன இருக்கிறது என்பதை பிரதிபலிக்கின்றது. ஒரு

மனிதன், தான் செய்யும் கிரியைகளின் மூலம் அடையாளம் கண்டு கொள்ளப்படுகிறான். எனவே நமது கிரியைகள் நல்லவைகளாக இருக்கவேண்டும். பாருங்கள் எப்பொழுதும் நல்லவைகளாக இருக்கவேண்டும். ஏனெனில் நாம் நமது இயேசு கிறிஸ்துவின் பிரதிநிதிகளாயிருக்கிறோம்.

10. அது எவ்வளவு அற்புதமான காரியம் – முக்கியமாக என்னைப் போன்ற வயதான ஒருவன் இங்கு நின்று கொண்டு மறைந்து கொண்டிருக்கும் வாழ்க்கையையும்,

கடந்து போன வாழ்க்கை யையும், நாம் எதிர்காலத்தில் நித்தியத்தை சந்திக்கப் போகின்றோம் என்பதையும் குறித்து ஆலோசனை செய்யும்போது. இந்த வாழ்க்கையில் மாத்திரம் என் நம்பிக்கையை நான் வைத்திருப்பேனானால், இன்று காலை நான் மிகவும் பரிதபிக்கப்படத்தக்க மனிதனாயிருப்பேன் ஆனால் வரவிருக்கும் ஒன்றுக்கு இவ் வாழ்க்கை நிழலாக மாத்திரமே அமைந்துள்ளது என்று நான் அறிந்திருக்கிறேன். இது ஒரு பிரதிபலிப்பு. இது தேவன் உண்டாக்கிய பரிபூரணமான

ஒன்றாக இருக்கமுடியாது. அழிந்து போகும் எதையுமே தேவன் சிருஷ்டிப்பதில்லை. பாருங்கள்? தேவன் நித்தியமானவர். எனவே நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த வாழ்க்கை, நமக்கு முன்னால் உள்ள ஒன்றை பிரதிபலிப்பதாக உள்ளது. உண்மையானது மரிக்க முடியாது – அழிந்து போக முடியாத சரீரம், எடுத்துக்கொள்ளப்பட முடியாத ஜீவன். பாருங்கள்? எனவே நாம் நித்திய ஜீவனைப் பெற்றுள்ளதாக வேதாகமம் கூறினால், அது சரியே. நாம் ஒருக்காலும் மரிக்கவே மாட்டோம். பாருங்கள்? நீங்கள்...

நீங்கள் மறுபடியும் பிறக்கும் போது, நீங்கள் தேவனுடைய ஒரு பாகமாகி விடுகின்றீர்கள். பாருங்கள். நீங்கள் என்றென்றைக்கும் நித்தியத்தில் இருக்கிறீர்கள், நீங்கள் ஒரு போதும் தவறவே மாட்டீர்கள். நீங்கள் தேவனுடைய ஒரு பாகமாயிருக்கிறீர்கள். ஏனெனில் நீங்கள் அவருடைய குமாரன்.

**11.** நான் வேறொரு பெயரை எடுத்துக்கொண்டு, என் பெயர் வேறொரு பெயர் என்று கூறலாம். நான் என் தாயின் பெயர் ஹார்வி என்பதை எடுத்துக்கொள்ளலாம். அது எனக்கு மிகவும் நெருங்கிய

ஒரு பெயர். இவ்வுலகில் என் தாய் ஹார்வி என்னும் பெயரை உடையவர்களாயிருந்தார்கள். நானும் கூட ஹார்வி என்னும் பெயரை எடுத்துக்கொள்ளலாம். ஆனால் என் இரத்தம் நான் ஒரு பிரன்ஹாம் என்பதை நிரூபிக்கும். பாருங்கள்? ஏனெனில் நான் என் தந்தையின் பாகமாயிருக்கிறேன். எனக்குள் இரத்தம் இருக்கும் வரைக்கும், நான் என் தந்தையின் பாகமாகவே இருப்பேன் பாருங்கள். அது உண்மை. அவ்வாறே நான் தேவனுடைய ஆவியால் பிறக்கும்போது, நான் தேவனுடைய ஒரு பாகமாகி விடுகிறேன்,

அவ்வளவுதான். அவர் என் பிதா என்று நான் அவருடன் அடையாளம் கண்டு கொள்ளப்படுகிறேன். அப்பொழுது என் வாழ்க்கை அவரைப் பிரதிபலிக்க வேண்டும் – என் வாழ்க்கை எவ்வாறு பூமிக்குரிய தந்தையை அவர் இருந்த ரூபத்தில் பிரதிபலிக்கிறதோ அவ்வாறே நான் காண்பதற்கு என் தந்தையைப் போல் உள்ளதாக பலர் கூறுகின்றனர். அப்படியானால் அவருடைய மனித ரூபம் என்னில் பிரதிபலித்துள்ளது. அவ்வாறே உங்கள் தந்தையும் உங்களில் பிரதிபலிக்கிறார் – உங்கள்

பெற்றோர்கள். எனவே நாம் மறுபடியும் பிறந்து அவருடைய ரூபத்துக்கு ஒப்பாக நாம் இருக்கும்போது, நம்முடைய தேவனாகிய பிதா நம்மில் பிரதிபலிக்கிறார்.

2கொரி. 3:2

எங்கள் இருதயங்களில் எழுதப்பட்டும், சகல மனுஷராலும் அறிந்து வாசிக்கப்பட்டும் இருக்கிற எங்கள் நிருபம் நீங்கள்தானே.

---

**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

---

செய்தி: **64-04-11 ஆவிக்குரிய நினைவிழப்பு**

---

**22.** ஒரு சமயம் தெற்கிலிருந்து வந்த, அவர்கள் அடிமைகளை வைத்திருந்தபோது சம்பவித்த ஒரு கதையை நான் படித்தேன். அவர்கள் அம்மக்களை கொண்டு

போய் சந்தைகளில் விற்பார்கள். நீ ஒரு உபயோகிக்கப்பட்ட காரை விற்பது போல. அங்கு ஒரு தரகர், வாங்குபவர் வந்து இந்த அடிமைகளை எடுத்து அவர்களை வியாபாரம் செய்வார். நீ எப்படி ஒரு காரையோ அல்லது வேறெதாவதைச் செய்வது போல. அந்த அடிமைகள் தங்கள் தேசத்தை விட்டு வெளியே இருப்பவர்கள். அவர்கள் ஆப்பிரிக்காவைச் சேர்ந்தவர்கள் ஆவர். போயர்கள் (Boers) அவர்களைக் கடத்தி இங்கு உள்ள தீவுகளுக்கு அவர்களைக் கொண்டு வந்து, ஜமைக்கா மற்றும்

பிற இடத்திலிருந்து ஐக்கிய நாடுகளுக்குள் கள்ளத்தனமாக கொண்டு வந்து அடிமைகளாக விற்றனர்.

இம்மக்கள் கவலை கொண்டவர்களாய் இருந்தனர் என்று நாம் காணலாம். ஏனெனில் அவர்கள் தங்கள் சொந்த வீட்டிலிருந்து கடத்தப்பட்டனர். அவர்கள் எதிரியால் வெளியே கொண்டு வரப்பட்டதால் கவலையாய் இருந்தனர். அவர்கள் மறுபடியும், தங்கள் கணவரையோ, மனைவியையோ, பிள்ளைகளையோ, தாய் தந்தையரையோ, காண

முடியாது. அவர்கள் முற்றிலுமாக அவர்களை வேலை செய்ய வைப்பதற்கென சாட்டையால் அடிக்கப்பட்டனர். அவர்கள் கவலை கொண்ட ஜனங்களாய் இருந்தனர்.

23. ஒரு நாள், தரகன் ஒரு தோட்டத்திற்கு வந்து அங்கு வெளியில் வேலை செய்து கொண்டிருந்த ஒரு கூட்டம் அடிமைகளை கண்டான். ஆதலால் அவன் சென்று எஜமானனை நோக்கி “எத்தனை அடிமைகளை நீர் வைத்திருக்கிறீர்?” என்று கேட்டான்.

அவன் “நூறு இருக்கலாம்” என்றான்.

”விற்கவோ, அல்லது மாற்றிக் கொள்ளவோ உம்மிடம் யாராவது உள்ளனரா?” என்று கேட்டான்.

”ஆம்” என்றான்.

”நான் பார்க்கட்டும்” என்றான். ஆகவே அவன் வயல்வெளியில் சென்று அவர்களை கவனித்தான். அவர்கள் சாட்டையால் அடிக்கப்பட வேண்டும் என்பதை அவன் பார்த்தான். சிறிது நேரம் கழித்து இவர்கள் சாட்டையால் அடிக்க தேவையில்லாத ஒரு வாலிபனைக் கண்டான். இவன் தன்

நெஞ்சையும், தன் முகத்தையும் நிமிர்த்தி நின்றவனாய் இருந்தான்; அவன் அடிக்கப்பட வேண்டியதில்லை. ஆதலால் அந்த தரகன் “நான் அந்த அடிமையை வாங்க விரும்புகிறேன்” என்றான்.

அதற்கு அவன் (எஜமானன் – தமிழாக்கியோன்) “அவன் விற் பனைக்கு அல்ல” என்றான்.

”நல்லது. அந்த அடிமையின் வித்தியாசத்தனம் என்ன? மற்ற எல்லாருக்கும் அவன் தலைவனா?” என்று கேட்டான்.

அதற்கு அவன் (எஜமானன்– தமிழாக்கியோன்) ”இல்லை

அவனும் ஒரு அடிமைதான்” என்றான்.

”நல்லது. அவனை வேறு விதமாக போஷிக்கின்றீரா?” என்று கேட்டான்.

”இல்லை, மற்ற எல்லா அடிமைகளோடும் அந்த தளத்தில் (GALLEY) தான் அவன் சாப்பிடுகிறான்” என்று கூறினான்.

”நல்லது எது அவனை மற்ற அடிமைகளிலிருந்து மிகவுமாக வித்தியாசப்படுத்துகிறது?” என்று கேட்டான்.

“நல்லது. நானும் இதைப் பற்றி நீண்ட நாளாக ஆச்சரியப்பட்டுக்


கொண்டிருக்கிறேன். ஆனால் ஒரு நாள் நான் அறிந்து கொண்டேன். அதாவது அவன் விட்டு வந்திருக்கிற அவனுடைய நாட்டிலே, ஒரு முழு இனமரபு குழுவிற்கு (Tribe) அவனுடைய தந்தை தான் ராஜா ஆவார். ஆனாலும் இவன் வீட்டிற்கு வெளியே இருந்தாலும், அன்னிய இடத்திலே இருந்தாலும், தான் ஒரு ராஜாவின் குமாரன் என்று அவன் அறிந்திருக்கிறான். தன்னை ஒரு ராஜாவின் குமாரனைப் போன்று நடத்திக் கொள்கிறான்" என்று அவன் (எஜமானன் – தமிழாக்கியோன்) கூறினான்.

24. ஆனாலும் ஆப்பிரிக்காவிலிருந்து வருகின்ற ஒரு கறுப்பு இன மனிதன் தன் தகப்பன் ஒரு இனமரபு குழுவிற்கு (TRIBE) ராஜாவாயிருக்கிறான் என்று அறிந்திருப்பானானால் ஒரு மறுபடியும் பிறந்த கிறிஸ்தவன் ஒரு மனிதனோ அல்லது ஸ்திரீயோ நம்முடைய பிதா தான் மகிமையிலிருக்கும் வானாதி வானத்தின் தேவன் என்று அறிந்து எப்படி இருக்கவேண்டும் என்று நான் எண்ணினேன். நாம் நம்மை ஒரு கிறிஸ்தவ மனிதனாகவே, ஸ்திரீயாகவே நடத்திக் கொள்ள வேண்டும்! நாம் அதைப் போன்று

நடக்க, உடையுடுத்திக் கொள்ள, பேச, ஜீவிக்க வேண்டும். நாம் அந்நியராயிருந்தாலும் நாம் ராஜாவின் பிள்ளைகளாய் இருக்கிறோம். ஆமென்.

இஸ்ரவேலானது அதே குழியில் விழுந்து, சீர்கெட்டுப் போனது, நம்முடைய குணாதிசயம், சீர்கேடு நாம் இப்பொழுது வாழ்ந்து கொண்டிருக்கிற இந்நாட்களைப் போல! அவர்கள் தேவனுடைய பிரமாணங்களை மறந்தனர். "விபச்சாரம் செய்யாதிருப்பாயாக, பிறனுடைய மனைவியை இச்சியாதிருப்பாயாக" இன்னும்

மற்றைய காரியங்களை, அவர்கள் அந்த பிராமணங்களை மறந்தனர். அது இனிமேல் அவர்களுக்குத் தேவையில்லை. எப்படி சபையானது இப்பொழுது இருக்கின்றதோ அதே போன்று அவர்கள் மற்ற உலகத்தாரைப் போன்று வாழ விரும்பினர்.



2கொரி. 3:2

எங்கள் இருதயங்களில் எழுதப்பட்டும், சகல மனுஷராலும் அறிந்து வாசிக்கப்பட்டும் இருக்கிற எங்கள் நிருபம் நீங்கள்தானே.


**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

செய்தி: **64-06-14M தேவன் திரைநீக்கப்படுதல்**

**134. "எழுதியிருக்கிறதே," பாருங்கள் எழுதியிருக்கிறது. "நீங்கள் எழுதப்பட்ட நிருபங்கள்" என்று வேதம் உரைக்கிறது. நிரூபம் என்றால் என்ன? "எழுதப்பட்ட**

வார்த்தை.” நீங்கள் எழுதப்பட்ட வேறு விதமாகக் கூறினால், நீங்கள் அதை இவ்வாறு படிக்கலாமே, நீங்கள்.... பவுல், ”நீங்கள் எழுதப்பட்ட நிரூபங்கள் அல்லது ”நீங்கள் எழுதப்பட்டு வெளிப்படுத்தப்பட்ட வார்த்தை” என்கிறான். அதனுடன் ஒன்றையும் கூட்ட முடியாது. நீங்கள் ’’நான் எழுதப்பட்ட நிரூபம்” என்று சொல்லிக் கொண்டு, ஏற்கனவே எழுதப்பட்டுள்ள விதமாக தவிர வேறெந்த விதமாகவும் வாழ முடியாது. ஏனெனில் இதனோடு ஒன்றையும் கூட்டவோ அல்லது

இதிலிருந்து ஒன்றையும் எடுத்துப் போடவோ முடியாது.



2கொரி. 3:2

எங்கள் இருதயங்களில்
எழுதப்பட்டும், சகல
மனுஷராலும் அறிந்து
வாசிக்கப்பட்டும் இருக்கிற
எங்கள் நிருபம் நீங்கள்தானே.

---

**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

---

செய்தி: **64-06-14M தேவன் திரைநீக்கப்படுதல்**

---

**138. ”நீங்கள் சகல மனுஷராலும் வாசிக்கப்படும் எழுதப்பட்ட நிரூபங்கள்” (2 கொரி. 3:2). ”நீங்கள் எங்கள்...” அதற்கு நீங்கள் சரியான அர்த்தம் உரைத்து**

இந்தப் பக்கம் திருப்பிப்பாருங்கள், பாருங்கள், அதை திருப்பி பாருங்கள். ”நீங்கள் எழுதப்பட்ட நிரூபங்கள்,” அதனோடு நீங்கள் ஒன்றையும் கூட்ட முடியாது, ”சகல மனுஷராலும் வாசிக்கப்படும் நிரூபங்கள்.” வேறு விதமாகக் கூறினால், ”வெளிப்பட்ட தேவனுடைய வார்த்தை. பேதுருவும் யோவானும் அங்கு சென்று அதைக் காண்பித்த போது, அவர்கள் படிப்பறியாதவர்களென்றும் பேதமையுள்ளவர்களென்றும் அவர்களுக்கு கல்வியறிவு இல்லையென்றும் அறிந்திருந்தபடியினால்

ஆச்சரியப்பட்டு, அவர்கள் இயேசுவுடனே கூட இருந்தவர்களென்றும் அறிந்து கொண்டார்கள். பாருங்கள், அவர்கள் படிப்பறியாதவர்கள், பேதமையுள்ளவர்கள், ஆனால் அவர்கள் எழுதப்பட்ட நிரூபங்களாயிருந்தபடியால், பாருங்கள், அவர்கள் இயேசுவுடனே கூட இருந்ததை அவர்கள் அந்த நிரூபத்தில் படித்தனர். ஏனெனில் இயேசு அவர்கள் மூலமாய் தம்மை வெளிப்படுத்திக் கொண்டிருந்தார். கிறிஸ்து அவர்கள் மாம்ச சரீரத்தில் திரைமறைக்கப்பட்டு, வெளிப்பட்டு, ஜீவிக்கிறவரானால்,

**139. அவர் மோசேயில் இருந்தது போல.**

வார்த்தை மோசேயில் இருந்தபோது, அவன் மாம்சத்தில் தோன்றிய தேவனாயிருந்தான். அது இயேசுவில் இருந்தபோது அவர் மாம்சத்தில் தோன்றிய தேவனாயிருந்தார். பாருங்கள்? அவர் செய்த ஒன்றே ஒன்று தமது முகமூடியை மாற்றிக் கொள்ளுதல் – வார்த்தையை அல்ல, அவருடைய தன்மையை அல்ல. அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார். அவர் தமது உருவத்தை மாத்திரமே மாற்றிக்

கொண்டார். அவர் நோவாவிலிருந்து மோசேக்கு மாறினார்; அவர் மோசேயிலிருந்து தாவீதுக்கு மாறினார்; தாவீதிலிருந்து, யோசேப்புக்கு, இப்படி படிப்படியாக மாறிக் கொண்டே வந்து தேவத்துவத்தின் பரிபூரணத்தை சரீரத்தில் கொண்ட நிலையை அடைந்தார். பாருங்கள்?

அது இன்னமும் அதே தேவன்! ஆமென்! ஆமென்! அது விளங்குகிறது என்று நம்புகிறேன். பாருங்கள்? அது அதே தேவன், ஆனால் அவர் வேறொரு திரையை எடுத்துக் கொள்கிறார். பாருங்கள்,

அவர் மற்றொரு திரையைப் போட்டுக் கொள்கிறார்.



Bro. Branham:

~~~~~~

உபத்திரவங்கள் நம்மை பொறுமைசாலிகளாக் குகிறது. அது நம்மை தேவனுடைய வருகைக்கு காத்திருக்கச் செய்கிறது.

~~~~~~

செய்தி: யூபிலி ஆண்டு,

54-1003E



www.themessage.com/en
/sermonsdownload